12th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டாக்டர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தால், அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. மற்ற டாக்டர்களுக்கும் கம்பெனியார்களே கொஞ்சம் சலுகை காட்டித்தான் வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. வை. சங்கரன் : கனம் அங்கத்தினர் திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் விரும்புகிறபடி, சென்னை நகரத்தில் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் கார் பர்மிட் வழங்கிவிட்டு, மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு வழங்கவில்லையென்றால், அது 'டிஸ்க்ரிமினேஷன்' செய்யப்பட்டதாகச் சொல்லி, 'ரிட்' போடுவதற்கு இடமளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர். 'ரிட்' அவர்களுக்குத் தண்ணீர் பட்ட பாடமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்காமல் இருப்பதற்கில்லை. (சிரிப்பு).

திருமதி சி. குழந்தையம்மாள் : 'சர்க்கார் உத்தியோகஸ்தர்' என்கிற 'காடிகரி' யிலே கனம் அமைச்சர்கள் சொந்த முறையில் கார் வாங்கிக்கொள்ள சட்டம் இடங்கொடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுகூட இல்லை. அமைச்சர்கள் தனிப்பட்ட ஹோதாவில் 'சொந்த உபயோகத்திற்கு' என்று கேட்டால்கூட, இந்தச் சலுகையிலே சேர்க்கவில்லை. 'சேர்க்க முடியாது' என்றே அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

கலை அரங்கு (அரக்கோணம்)

*110 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபையினரிடமிருந்து கலை அரங்கு ஒன்று வாங்க அனுமதி கோரி தீர்மானம் வந்ததா ?

(இ) அதன் மீது சர்க்கார் என்ன முடிவு செய்தனர் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

Junior Polytechnic Schools

*111 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places where the Junior Polytechnic Schools are to be opened during 1963; and

(*b*) when they would be opened?

[12th August 1963

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Thoovakudi, Vellore and Nagercoil.

(b) Already opened in July 1963.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பாலிடெக்னிக்குகளுக்கும் ஜூனியர் பாலிடெக்னிக் பள்ளிகளுக்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டா? அப்படியானல், என்ன வித்தியாசம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாலிடெக்னிக் படிப்பு என்பது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் மூன்று வருஷம் பயிற்சி பெற்று டிப்ளமா ஹோல்டர் ஆவது. அது சூபர்வைசர் கிரேடு. ஜூனியர் பாலிடெக்னிக் என்பது, ஹைஸ்கூலில் எட்டாவது வரையில் ஒரு க்ராஃப்டை எடுத்துக்கொண்டு படிப்பது. அவர்கள் இன்ட்ஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூலில் எல்லாவிதமான க்ராஃப்ட்டுகளும் கற்றுக் கொள்ளுவார்கள். சாதாரண பாடமும் ஒரு தொழிலும் சேர்த்துப் படிக்கிற பள்ளிக்கூடம் ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல் ஆகும்.

திருமதி சி. குழந்தையம்மாள் : கோவை மாவட்டத்திலிருந்து, 'பெண்களுக்கென ஒரு பாலிடெக்னிக் வைக்கவேண்டும்' என விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வந்ததா? அதற்கு என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. வீ. ராமநாதன் : திருச்சி மாவட்டம் கரூரில் பாலிடெக்னிக் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூலக் கேள்வி ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல்ஸ் சம்பந்தமானது. பாலிடெக்னிக் சம்பந்தமான தகவல் வேண்டுமானல் தனிக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.

Text books for High Schools

* 112 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether students are experiencing any difficulty in getting the books prescribed for the High Schools, published by the Government; and

(b) if so, the action taken to get over the difficulty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have not received any representation in this regard.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நான் இந்தக் கேள்வி போடும் போது இருந்த நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.